RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22348

# நற்றிணையில் தமிழர் பண்பாடு

ம. புகழேந்திர சோழன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி, நாகர்கோவில்-629003, தமிழ்நாடு, இந்தியா

# Tamil Culture in Natrinai

M. Pugazhendra Chozhan [a, *]

[a] Department of Tamil, Pioneer Kumaraswamy College, Nagercoil-629003, Tamil Nadu, India

* Corresponding Author:
pugazhcho@gmail.com

Received: 09-05-2022
Revised: 07-07-2022
Accepted: 18-07-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Natrinai is one of the best books on good ethics. Tamil culture has been part of the life of man since the beginning of his life. Tamil culture is interwoven through the Tamil language, Tamil customs, Tamil traditions, history, values and arts. The life of the people in literature reflects the Tamil culture. The purpose of this article is to explain that the songs of Natrinai explain our culture. Kindness to humans, maintenance of guests, barter system, marriage ceremonies and maturation were the customs of the Tamils. In the absence of scientific development like in the present times, the ancient people have mastered the ethics of life and culture.

**Keywords:** Natrinai, Tamil culture, Kindness, Relationship

## முன்னுரை

நல்ல ஒழுக்கமாகிய அகத்திணையை பற்றிக் கூறும் நூல் நற்றிணை அகத்திணை நூல்களிலே ஒரு தலைசிறந்த நூல் என்றே நற்றிணையை கூறலாம். தமிழர் பண்பாடு மனிதன் தோன்றிய காலம் முதலே அவருடைய வாழ்வில் கலந்துள்ளது (Chidambaranar, 1986). தமிழ் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் பழக்கவழக்கங்கள் ஊடாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும் பின்னிக்கிடக்கின்றன. இலக்கியங்களில் காணப்படும் மக்களின் வாழ்வியல் தமிழர் பண்பாட்டினைப் பறைசாற்றுவதாக உள்ளன (Vardarajan, 2003). நற்றிணைப் பாடல்கள் நம் பண்பாட்டினை விளக்குவதாக அமைந்துள்ளன என்பதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உயிர்கள் மேல் இரக்கம்

எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டுவது பண்டைய தமிழர்களின் பண்பாடாகும். காரணம் இல்லாமல் எவ்வுயிருக்கும் இன்னலிழைக்க மாட்டார்கள் என்ற உயர்ந்த பண்பை உடையவர்கள் தமிழர்கள் என்பதனைப் பின் வரும் பாடல் மூலம் அறியலாம்.

“புணரி பொருத பூமணல் அடைகரை

ஆழி மருங்கி ன் அலவன் ஓம்பி

வலவன் வள்பு ஆய்ந்து ஊர

நிலவு விரிந்தன்றால் கானலானே”

ஒரு தலைவன் தேரின் மேல் ஏறிக்கொண்டு வருகின்றான், அத்தேர் கடற்கரை வழியே வந்து கொண்டிருக்கிறது. கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன, தேரோட்டி வரும் பாகன் தேர் சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி கவனத்துடன் தேரை ஒட்டிக்கொண்டு வருகின்றான் (Avvai Duraisamy Pillai, 2010). இச்ச சமயத்தில் அவனுடைய செயலுக்கு உதவியாக நிலவும் தோன்றியது இந்நிகழ்வின் வழியாக தமிழர்களின் இரக்கப் பண்பாட்டினை உணர முடிகின்றது.

## விருந்தினர் பேனல்

விருந்தோம்புதலில் தமிழர்கள் தலைசிறந்தவர்கள் இல்லறத்திலே வாழ்வோர்க்குரிய கடமைகளில் 'விருந்து புரத்தல்' என்பது சிறந்த கடமையாக அறநூல்கள் கூறுகின்றன. எனவே விருந்தோம்பல் பண்பாடு ஒரு அறமாகவே காணப்படுகின்றது.

“எல்லி வந்த நல்லிசை விருந்திற்குச்

கிளரிழை அரிவை நெய்துழந்து அட்ட

விளரூன் அம்புகை எறிந்த நெற்றி”

ஒளிவிடும் அழகிய அணிகலன்கள் அணிந்த தலைவி தன் வீட்டிற்கு வந்த உறவினருக்கு நெய்யிட்டு பொறித்த கொழுத்த தசையினைப் பரிமாறினாள் (Avvai Duraisamy Pillai, 2010). இத்தகு சிறப்பு செய்த உன்னைத் தலைவன் அணைத்துக்கொள்ள எண்ணினான் என்று தோழி தலைவியை தேற்றுகின்றாள்

“நன்மனை நனிவிருந்து அயரும்

கைதூ வின்மையின் எய்தாம் ஆறே”

என்னுடைய நல்ல வீட்டிலே ஏராளமான விருந்தினர்கள் எப்பொழுதும் தங்கியிருக்கின்றனர் அவர்களை உபசரிப்பதிலேயே எங்கள் நேரம் கழிகின்றது, ஓய்வே இல்லை ஆகையால் ஊடல் தோன்றுவதற்கே இடமில்லை என்று கூறுகிறாள் (Avvai Duraisamy Pillai, 2010).

## பகிர்ந்துண்ணல்

இனக்குழு சமுதாய வாழ்வை மேற்கொண்டு இருக்கும் மக்களிடம் பகிர்ந்து உண்ணுதல் என்பது அடிப்படைப் பண்பாக அமைந்துள்ளது பண்டைத் தமிழரின் பண்பாட்டில் பாகுபாடின்றி பகுத்து உண்ணும் பண்பைத்தான்.

“கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை

தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு

காந்தள் அம் சிறுகுடிப் பதுக்கும்”

அந்த மலையில் உள்ள கானவன் முள்ளம்பன்றியை வேட்டையாடி கொண்டு வருவான் அவன் மனைவி கொடிச்சித் தேன்மணம் கமழும் கூந்தலை உடையவள் அவள் கிழங்கைக் கொண்டு

வருவாள் முள்ளம்பன்றிக்கறி கிழங்கு இரண்டையும் அவள் தம் சிற்றூர் மக்களுக்குப் பகிர்ந்து தருவாள் (Avvai Duraisamy Pillai, 2010).

## பண்டமாற்று முறை

பழங்காலத்தில் வாணிபம் என்பது பொருள்களை மாற்றிக் கொள்ளும் பண்டமாற்று முறையாகவே இருந்தது. அக இலக்கியங்கள் இப்பண்டமாற்று முறையை சிறப்பாக கூறுகின்றன.

"தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து

பிறநாட்டு உப்பின் கொள்ளைசாற்றி

நெடுநெறி ஒழுகை நிலவுமணல்"

மருத நிலத்தில் உள்ள உப்பு வணிகர் தம் நிலத்தில் விளைந்த வெண்ணெல்லை நெய்தல் நிலத்தில் வாழும் மக்களிடம் விற்றனர். அந்நெல் விலைக்கு நெய்தல் நில உப்பைப் பெற்றுக்கொண்டு போய் விலைகூறி விற்றனர். உப்பை ஏற்றிய வண்டிகள் நிலாப் போன்ற மணற்பரப்பை உடைய நீண்ட நெறிகளில் சென்றன. என்று பண்டமாற்று முறை பற்றி நற்றிணை எடுத்துரைக்கின்றது (Avvai Duraisamy Pillai, 2010).

## திருமணச் சடங்கு

திருமண விழாக்களில் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்வும் நம் பாரம்பரியத்தைப் பறைசாற்றுவதாக உள்ளன. அதிலும் பெண்களுக்கு செய்யப்படுகின்ற சடங்கு முறைகள் தமிழர் வாழ்வில் மிகவும் முக்கியமானதாக குறிக்கப்படுகின்றன. திருமணம் நடைபெறும் முன் மணப்பெண்ணுக்குச் சடங்குகள் செய்யப்படுகின்றன. பெண்ணுக்கு அலங்காரம் செய்வதிலிருந்து மங்கள நான் பூட்டும் வரை அவளுடன் இருக்கும் பெண்கள் குழந்தை பெற்றெடுத்த சுமங்கலி பெண்களாகவே உள்ளனர். இத்தகைய திருமணத்திற்கு முன்பு தனது மகளை வேறொரு ஆண் திருமணம் செய்யும்போது சிலம்பு கழிதல் என்னும் விழா நடைபெறும். இது திருமணத்திற்கு முன் செய்யப்படும் ஒரு வகை சடங்கு ஆகும். கன்னிமைக் கழித்தல் என்பர் இதனைப் பின்வரும் நற்றிணைப் பாடல் வழி அறியலாம்.

"வெயில்காய் அமையத்து இமைக்கும் அத்தத்து

அதருழந்து அசையின கொல்லோ ததரல்வாய்ச்

சிலம்பு கழிஇய செல்வம்

பிறருணக் கழந்த என் ஆயிழை அடியே"

சங்க காலத்தில் சடங்கு முறைகள் மக்களிடையே முக்கியத்துவம் பெற்றமையை அறியமுடிகிறது (Avvai Duraisamy Pillai, 2010).

## தை நீராடல்

பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்களில் தை நீராடல் என்பது முக்கியமான ஒன்றாக அமைந்தது. தாம் விரும்பும் ஆடவனை கணவனாக பெறுவதற்காக பெண்கள் தை நோன்பு நோற்பார்கள் என்பதனை மருதத் திணை பாடல் வழி அறியலாம்.

“தைஇத் திங்கள் தன் சுயம் படியும்

பெருந்தோட் குறுமகள் அல்லது

மருந்துபிறிது இல்லை யான்உற்ற நோய்ககே”

தலைவனை அடைந்து விட வேண்டும் என எண்ணிய தலைவிக்கு நாணம் ஒரு தடையாக இருந்தது. இதனால் தலைவனைச் சேராது வருத்தம் கொண்டால். தை நீராடி சென்று தலைவனைக் கண்டால் நான் கொண்ட நோய்க்குத் தலைவி தான் மருந்து என தலைவனும் உரைக்கின்றான் (Avvai Duraisamy Pillai, 2010).

## மகப்பேறு

நற்றிணையில் இல்லறம் போற்றப்படுகிறது, மகப்பேறுடன் வாழும் தனிக் குடும்ப அமைப்பு, தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லற வாழ்வில் மகிழ்ச்சியும் பெருமையும் உடையதாக போற்றப்படுகிறது. தலைவியின் மகப்பேறு தலைவனுக்கு மட்டுமின்றி அவனைச் சார்ந்த சுற்றத்தாருக்கும் மகிழ்ச்சியை தந்ததாக கூறப்படுகிறது.

“கடும்புடைக் கடுஞ்சூல் நம குடிக்கு உதவி

நெய்யோடு இமைக்கும் ஐயவித்திறல் காழ்

விளங்கு நகர் விளங்கக் கிடந்தோம் குறுகி

புதல்வன் ஈன்றென பெயர்த்தது”

தலைவி சுற்றுத்தார்கள் சூழ ஓம்புகின்ற சிறந்த சூல் அடைந்து மகவு ஈன்றால். நெய்யுடன் கலந்து ஒழிகின்ற சிறுவெண் கடுகாகிய திரண்ட விதைகளை மனையெங்கும் பூசி அயர்ந்து படுக்கையில் படுத்திருந்தாள். அப்போது தலைவன் நீ பெறற்கரிய புதல்வனைப் பெற்றதனால் தாயென்ற வேறாகிய பெயரைப் பெற்றாய் என்கிறான் (Avvai Duraisamy Pillai, 2010).

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கூறுகளை அறிய முடிகிறது. மனிதர்களுக்கு இரக்கம் காட்டுதல், விருந்தினரைப் பேணுதல், பண்டமாற்று முறை திருமணச் சடங்கு, மகப்பேறு போன்ற பழக்கவழக்கங்களை தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதனை அறிய முடிகிறது. தற்காலம் போல் அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்தில் பண்டைய கால மக்கள் வாழ்வியல் நெறிமுறை பண்பாடுகளை நன்கு உணர்ந்து சிறப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதனை மேற்கண்ட செய்திகள் வழி அறியலாம்.

## References

Avvai Duraisamy Pillai (2010) Natrinai Mulamum Uraiyum, Poompukar Pathppagam, chennai, India

Chidambaranar, S. (1986) Ettuthohaiyum Tamilar Panpadum, Ilakkiya Nilayam, Madras, India

Vardarajan, M. (2003) Tamil Ilakkiya Varalaru, Sahitya Akadami, New Delhi, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License